**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 28.10.2025**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 27°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 09°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

**1. மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மழையை ஒட்டிய பகுதிகளில் சில இடங்களில் மிதமான மழையும் மற்ற பகுதிகளில் இலேசான மழையும், அதிகபட்ச வெப்பநிலை 26°செ முதல் 29°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19°செ முதல் 22°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 08-22 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் காற்று தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் லேசானது முதல் மிதமான மழையுடன் மணிக்கு 08-26 கிமீ வரை காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்த மழை மற்றும் அதிக மண் ஈரப்பதம் காரணமாக பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலையானது சராசரியினை விட 2-3 டிகிரி செல்சியஸ் வரை குறைய வாய்ப்புள்ளது. அனைத்துப்பயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும். குறைந்த வெப்பநிலை மற்றும் அதிகப்படியான ஈரப்பதத்தில் வேர்களின் உறிஞ்சு திறன் குறைவாக இருப்பதனால் விதைத்தல், நடவு செய்தல் நீர்பாசனம், உரமிடுதல், ஒத்திவைக்கவும். மருந்து தெளித்தல் மற்றும் ஏனைய பயிர்மேலாண்மை நடவடிக்கைகளை மழையில்லா நாட்களில் செய்யலாம்.
- தற்போது நடவு செய்துள்ள சம்பா நெற்பயிருக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும். புதிய நடவினை ஒத்தி வைக்கவும். தொடர்மழையினால் நீர்தேங்கியதால் பாதிக்கப்பட்டுள்ள நெற்பயிர்களில் நீரினை வடித்தபின் ஏக்கருக்கு 25 கிலோ யூரியா இடவேண்டும். தேவைப்பட்டால் 1 சதவீத யூரியா (அ) 2 சதவீத டி ஏ பி கரைசலை மழையில்லா நாட்களில் இலைவழி ஊட்டமாகத் தெளிக்கவும்.
- மக்காசோளத்தில் தொடர்மழையினால் அதிக மண் ஈரத்தின் காரணமாக வேர்களின் குறைந்த செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்காசோளத்திற்கு 1 சதவீத யூரியா (அ) 2 சதவீத டி ஏ பி கரைசலை மழையில்லா நாட்களில் இலைவழி ஊட்டமாகத் தெளிக்கவும்.
- மஞ்சளில் கடந்தவார தொடர் மழையினால் அதிக மண் ஈரத்தின் காரணமாக வேர் மற்றும் கிழங்கு அழகலைத் தவிர்க்க போதிய வடிகால் வசதி செய்து ஒரு ஏக்கருக்க 4 கிலோ டிரைகோடெர்மா விரிடியினை நீரில் கரைத்து வேருக்கு அருகில் ஊற்றவும்.
- தென்னையில் மரத்தினைச்சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்திகளை 1.5 மீட்டர் தொலைவில் சிறிது ஆழமாக எடுத்தி மழை நீரினை வேரில் சேமிக்கவும்.
- கோழி மற்றும் மாட்டு கூடங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்கவும். பூஞ்சான நச்சு பாதிக்கபடாமல் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்யவேண்டும். வெப்பநிலை குறைய வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழி

கூடாரங்களைச் சுற்றிலும் நன்கு காய்ந்த தடிமனான சாக்குப்பைகளை தொங்கவிட்டு குளிரினால் பாதிக்கப்படுவதை தவிர்க்கவும்.

- மழையில் புதிதாக முளைத்த புற்களை கால்நடைகளுக்கு கொடுக்கவோ மேய்ச்சலுக்கு விடவோ வேண்டாம்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 29.10.2025 முதல் 02.11.2025 ஆகிய தினங்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.. அதிகபட்ச வெப்பநிலை 29 - 33°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 25°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 90-100 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 06 - 20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் வடமேற்கு தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- நெல் வயலில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் வடிகால் வசதியை அதிகப்படுத்தி, பயிர் மூழ்காதவாறு தேங்கியுள்ள நீரை வெளியேற்ற வேண்டும்.
- வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும்.
- தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கால்நடை தொழுவத்திலும் அதன் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதை தவிர்த்து வடிகால் வசதி ஏற்படுத்தவும். தீவன பொருட்களை மழை நீரில் நனையாமல் பாதுகாக்கவும். வெளிப்புற ஒட்டுண்ணிகளை தவிர்க்க தேங்கி நிர்க்கும் மழை நீரை கால்நடைகள் குடிப்பதை தவிர்க்கவும்
- கனமழை எதிர்பார்க்கப்படுவதால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளை மேட்டுபாங்கான பகுதியில் மழை சாரல் படாமல் பாதுகாக்கவும்.

**3. தெற்குமண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிகவும் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 29-35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 08-36 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்றும் காற்று பெரும்பாலும் மேற்கு தென்கிழக்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- நெல்லில் தொடர் மழையால் பயிர் சாய்ந்து போக வழிவகுக்கும். எனவே கசிவு நீர் மீண்டும் வயலுக்குள் பாய்வதைத் தவிர்க்க, முறையான வடிகால் வாய்க்கால்களை அமைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- பருத்தி, உளுந்து, மக்காச்சோளத்தில் தொடர் மழை எதிர்பார்க்கப்படுவதால் தண்ணீர் தேங்கி நிற்க வழிவகுக்கும், அதனால் இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவதை தவிர்க்க விவசாயிகள் அதிகப்படியான தண்ணீரை வெளியேற்ற முறையான வடிகால் வாய்க்கால்களை அமைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- வாழையில் தண்ணீர் தேங்குவதால் ஏற்படும் சேதத்தை தவிர்க்க வடிகால் வாய்க்கால்களை திறந்து வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- மழைக்காலங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதைத் தவிர்க்கவும், நீர் தேங்குவதைத் தவிர்க்க கால்நடைகள் தங்குமிடங்களை தூய்மையாகவும், சரியான சாய்வாகவும் வைத்திருக்குமாறு விவசாயிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 29.10.2025 முதல் 02.11.2025 வரை இலேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்பநிலை 25-35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 06-24 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். பெரும்பாலும் காற்று மேற்கு, தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

**நெல்**

நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் கவனத்திற்க்கு காற்றின் உள்ள அதிக ஈரப்பதத்தினால் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலுக்கான வாய்ப்பு உள்ளது. இலைப் பேன் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி என்ற அளவில் அசாடிராக்ட்டின் மருந்தினை ஓட்டும்பசை உடன் கலந்து தெளிக்கவும்.

**பருத்தி**

மானாவாரியில் பருத்தி பயிரிடும் விவசாயிகள், தற்போது பெய்துள்ள மழையை பயன்படுத்தி நடவு செய்த 10 நாட்களில் ஏக்கருக்கு 5 கிலோ பருத்தி நுண்ணூட்டம் அல்லது 20 கிலோ மெக்னீசியம் சல்பேட் உரத்தினை கொடுத்து நுண்ணூட்டசத்து குறைபாட்டினை நிவர்த்தி செய்யலாம். மேலும் மக்கிய தொழு உரத்துடன் ஏக்கருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் 2 கிலோ பாஸ்போ பாக்டீரியாவை கலந்து இட்டு சிறந்த பயிர் வளர்ச்சியுடன் நல்ல மகசூலை பெறலாம். பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும்.

**நிலக்கடலை**

பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும். ஐப்பசி பட்டம் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் தழைச்சத்து மற்றும் மணிச்சத்தை மூன்று பிரிவுகளாக பிரித்து கொடுக்கவும். ஆதாவது, அடியுரமாக 50%, விதைத்த 20-ம் நாளில் 25% மற்றும் விதைத்த 45-ம் நாளில் 25% மும் அளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

**மக்காச்சோளம்**

மக்காச்சோளப் பயிரில் அசுவினி தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இவ்வகை அசுவினிகள் இலை குருத்துகளின் வட்டப் பகுதியை சுற்றிலும் கூட்டமாக காணப்படும்இ இவற்றின் தாக்குதலின் அறிகுறியாக இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி என்ற அளவில் வேப்ப எண்ணெய் மற்றும் 40 கிராம் சூடோமோனஸ் உடன் 10 மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்க வேண்டும்.

**மல்லிகை**

மல்லிகை பூப்பயிரில் தண்டு மற்றும் வேர் அழுகல் நோய்த் தாக்குதல் பரவலாக தென்படலாம். இந்நோய் தாக்குதலின் அறிகுறியாக தாவரங்களின் எல்லா நிலைகளிலும் தொற்று ஏற்படும். முதலில் முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமாக மாறும் பின் இளம் இலைகள் மஞ்சளாகும். இறுதியில் தாவரம் இறந்துவிடும். மேலும் வேர் பகுதியில் கருப்பு நிறமாற்றம் தென்படும். இதனைக் கட்டுப்படுத்த, **பாதிக்கப்பட்ட செடிகளை சேகரித்து அப்புறப்படுத்த வேண்டும்**. ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2½ கிராம் என்ற அளவில் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினைக் கலந்து செடியின் தூர்பகுதியில் ஊற்ற வேண்டும்.

***மிளகாய்***

*பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும். மிளகாய் பயிரில் இலைச்சுருட்டு நச்சுயிரி நோய் தாக்குதல் தென்படுகின்றது. இந்நோய் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் மூலம் பரவுகின்றது. சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இந்நோய் பரவுதலை கட்டுப்படுத்தலாம். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் வெர்ட்டிசீலியம் லெக்கானி, 2 கிராம் பால்பெருங்காயம், 100 மில்லி புளித்த மோர் போன்றவைகளை நன்கு கலந்து செடிகள் நன்கு நனையுமாறு காலை அல்லது மாலை வேலைகளில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.*

***கால்நடை***

*தற்போது நிலவி வரும் வானிலையின் காரணமாக விவசாயிகள் கால்நடைகளை மேச்சலுக்கு சூரியன் உதித்து 2 மணி நேரத்திற்கு பின்பு அனுப்ப வேண்டும். மாட்டு கொட்டகைகளை சுற்றி கோணி சாக்கு பை கொண்டு மறைத்து கட்டவும்இ கொட்டகைகளை ஈரப்பதம் இல்லாதது நன்கு உலர்ந்து இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் உலர்ந்த தீவனங்கள் மற்றும் பசுந்தீவனங்கள் கொடுக்கும் போது ஈரப்பதம் இல்லாமல் கொடுப்பதன் மூலம் பூஞ்சான தொற்றில் இருந்து தங்களது கால்நடைகளை காப்பாற்றலாம்.*

***4. மலைப்பிரதேச மண்டலம்***

*மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் இருக்கும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 15-18°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 10-13°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-100 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 06-16 கி.மீ அளவுக்கு வீசக்கூடும்.*

***வேளாண் அறிவுரை***

- *போதிய வடிகால் வசதி வழங்குதல். உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு போன்ற உழவியல்/ பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நிற்கும் வரை ஒத்திவைக்கவும்.*
- *உருளைக்கிழங்கில் இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்த, நடவு செய்த 45, 60 (மற்றும்) 75 நாட்களில் மான்கோசெப் @ 2 கிராம் /லிட்டர் (அல்லது) குளோரோதலோனில் @ 2 கிராம் / லிட்டர் என்ற அளவில் இலைவழி தெளிப்பாக, மழை இல்லாத நேரங்களில் தெளிக்கவும்.*
- *கேரட்டில் நூற்புழு மேலாண்மைக்கு, நடவு செய்யும் போது எக்டருக்கு 1 டன் வேப்பம் புண்ணாக்கு மண்ணில் இடவும். கடுகு செடிகளை உயிரி புகையாக்குதல் மற்றும் வேப்பம்புண்ணாக்கு ஒரு ஹெக்டருக்கு 250 கிலோ இடுதல், பர்ப்பூரோசிலியம்லிலாசினம் @ 5 கிலோ/எக்டர் என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.*
- *முட்டைக்கோசு பயிரில் கறுப்பு அழுகல் நோய்யை கட்டுப்படுத்த, காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி என்ற அளவில் இலைவழி மூலம், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.*
- *குருமிளகு வாடல் நோயைக் கட்டுப்படுத்த, ஒரு செடிக்கு டிரைக்கோடெர்மா அஸ்பெரெல்லாம் / அல்லது பேசிலஸ்சப்டிலிஸ்@ 25 கிராம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு 500 கிராம் இடலாம். மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.*
- *பீட்ரூட் பயிரில் செர்கோஸ்போரா இலைப் புள்ளியை நிர்வகிக்க, பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றி அழிக்க வேண்டும். பயிர் சுழற்சி முறையை மேற்கொள்ள வேண்டும். காப்பர் ஆக்ஸிகுளோரைடு 0.3% 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.*
- *தேயிலையில் கொப்புள கருகல் நோய் மேலாண்மை முறைகள், பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் தளிர்களை கவாத்து மூலம் நீக்கி அழிக்கவும். ஹெக்ஸகோனசோல் @ 200 மிலி + காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 210 கிராம்/ எக்டருக்கு 5 நாட்கள் இடைவெளியில் (அல்லது)*

காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 210 கிராம் + புரோபிகோனசோல்@ 200 மிலி, எக்டருக்கு 10 நாட்கள் இடைவெளியில், குறிப்பாக ஜூன்- செப்டம்பர் மற்றும் அக்டோபர் - நவம்பர் மாதங்களில் தெளிக்கவும். எளிதில் நோய் பாதிக்கக் கூடிய ரகங்களை தவிர்த்து, நோய் எதிர்ப்பு ரகங்களையிரிடவும் மத்திய பூச்சிக்கொல்லி வாரியப் பரிந்துரைகள் • பின் வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவுமு. ஹெக்ஸகோனசோல் 5% EC @ 200ml/ha (அல்லது) ப்ரோபிகோனசோல் 25% EC @ 125-250ml/ha (அல்லது) கார்பென்டாசிம் 12%+ மான்கோசெப் 63% WP @ 1250g/ha (அல்லது) • ஹெக்ஸகோனசோல் 4% + ஜினெப் 68% WP @ 625g/ha என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.

- இஞ்சி மென் அழுகல் மேலாண்மை, போதுமான வடிகால் வசதிகளை ஏற்படுத்தலாம். நோயற்ற விதை கிழங்குகளைத் தேர்ந்தெடுத்து, விதைக் கிழங்குகளுக்கு மான்கோசெப் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 3 கிராம்/லி அல்லது 200 பிபிஎம் ஸ்ட்ரெப்டோசைக்ளின் மூலம் 30 நிமிடங்களுக்கு விதை நேர்த்தி செய்யலாம். நோயுற்ற வயலில், பாத்திகளை காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி அல்லது போர்டாக்ஸ் கலவை@ 1%என்ற அளவில் மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.

## 5. வட மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்பட்டு மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் லேசானது முதல் மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 27 - 29°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 06-16 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் காற்று மேற்கு - தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரை

- உளுந்து, பாசிப்பயறு மற்றும் தட்டைப்பயறு போன்ற பயறு வகைப் பயிர்களில் பூக்களின் உதிர்வைக் குறைத்து, காய்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மற்றும் 20 சதவீதம் வரை மகசூல் அதிகரிக்க ''**பயறு அதிசயம்**'' என்ற உட்டச்சத்துக் கலவையை ஒரு ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் ஒட்டும் திரவத்துடன் கலந்து பூ பூக்கும் பருவத்தில் இலைவழி தெளிப்பு செய்ய வேண்டும்.
- புரட்டாசி பட்டம் நடவு மேற்கொள்ளப்பட்ட சின்ன வெங்காயப் பயிரில் மழை மற்றும் குறைந்த வெப்பநிலைக் காரணமாக **திருகல் நோய்** தென்படுகிறது. இது கொல்லேட்டோடிரைக்கம் என்னும் பூஞ்சாணத்தால் ஏற்பட்டு வேகமாக பரவக் கூடியது. எனவே விவசாயிகள் ரிடோமில் கோல்டு (மெட்டாலாக்சில் + மேன்கோசெப்) என்னும் பூஞ்சாணக்கொல்லி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் ஒட்டும் திரவம் கலந்து இலைவழித் தெளிப்பாக 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிப்பதன் மூலம் இந்த நோய் பரவலைக் கட்டுப்படுத்தலாம்.
- மரவள்ளி பயிரில் தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலையில் அடிக்கடி மழை பெய்து கொண்டிருக்கிறது. இதனால் தற்போது அறுவடை நிலையில் உள்ள மரவள்ளி மற்றும் கிழங்கு பிடிக்கும் தருவாயில் உள்ள பயிரில் தண்ணீர் தேங்கி நிற்பதால் ஆங்காங்கே **கிழங்கு அழுகல் நோய்** ஏற்படுகிறது. இதை தவிர்க்க வயலில் நன்கு வடிகால் வசதி செய்ய வேண்டும். மேலும் ஒரு செடிக்கு *பேசில்லஸ் சப்டிலிஸ்* 1 லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் + *டிரைக்கோடெர்மா விரிடி* 1 லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் கலந்து செடிக்கு செடி ஊற்ற வேண்டும் அல்லது ஊடுருவி பாயக்கூடிய இராசாயன பூஞ்சாணக் கொல்லிகளான கார்பென்டசிம் அல்லது டெபுகோனசோல், இவற்றில் ஏதாவது ஒரு மருந்தை 1 லிட்டர்

*தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து ஊற்றினால் கிழுங்குகள் அழுகாமலும், செடிகள் சாகமலும் காப்பாற்ற முடியும்.*

**கால்நடை ஆலோசனைகள்**

- *பருவமழைக் காலங்களில் காற்றில் ஈரப்பதம் அதிகமாக இருப்பதாலும், ஆங்காங்கே மழைநீர் தேங்குவதாலும் கால்நடைகளில் அக ஒட்டுண்ணிகள், ஈக்கள் மற்றும் கொசுக்களின் தாக்கம் அதிகமாக காணப்படும். எனவே பண்ணையாளர்கள் அவைகளிடமிருந்து கால்நடைகளைப் பாதுகாத்துக்கொள்ள அந்தி மாலைப் பொழுதிலும், தண்ணீர் அதிகமாக தேங்கியுள்ள குளம், குட்டை ஆகிய பகுதிகளிலும் மேய்ச்சலுக்கு கொண்டு செல்வதை தவிர்க்க வேண்டும். மேலும் கால்நடைகளின் கொட்டகையைச் சுற்றிலும் மழைநீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.*

- *கொட்டகையின் உள்ளே அந்தி மாலைப் பொழுதில் ஈக்கள் மற்றும் கொசுக்களை விரட்ட புகைமூட்டம் அல்லது பூச்சிக்கொல்லி கலந்த ரசாயனங்களைக் கொண்டு ஈக்கள் மற்றும் கொசுக்களை விரட்டலாம். மேலும் பருவமழை காலங்களில் இவ்வாறு செய்வதன் மூலம் கால்நடைகளில் ஈக்கள் மற்றும் கொசுக்களின் மூலமாக பரவும் ஒட்டுண்ணி மற்றும் நச்சுயிரி நோய்களின் தாக்கத்தினை தவிர்க்கலாம்.*
- *மாடு, ஆடுகளில் கன்று, குட்டி ஈனுவது தமிழகத்தில் மழைக்காலங்களில் அதிகமாக காணப்படும். பொதுவாக கன்று ஈனும்போது, பிறப்பு உறுப்புகளில் சிறு காயங்கள் ஏற்படும். மேலும் திசுக்கழிவுகள் புழுப்புண்களை ஏற்படுத்தும் ஈக்களை கவரக்கூடியதாகும். அதனால் புழுப்புண் ஏற்படாமல் தடுக்க பிறப்பு உறுப்பு மற்றும் வேறு இடத்தில் காயம் ஏற்பட்டால் வேப்ப எண்ணெய் அல்லது ஈ விரட்டும் களிம்புகளை தடவலாம்.*

**6. வடகிழக்கு மண்டலம்**

*வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வானம் தெளிவாக காணப்படும். பகல்நேர வெப்பநிலை 23°செ முதல் 27°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் 08-42 கி.மீ ஆகவும் பெரும்பாலும் மேற்கு தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரைகள்**

- *அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். நாற்றங்கால் வயலுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும்.மேலும் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்றவற்றை தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும்.*
- *தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைப்பேன் தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது. இலைப்பேன் தாக்கிய இளம் பயிர்களின் இலைகள் சுருண்டு நிறம் மாறி காணப்படும். நாற்றுக்களின் இலைகளில் மஞ்சள் நிறகோடுகள் காணப்படும். இதன் அறிகுறிகள் நாற்று பருவத்திலும், நடவு வயலிலும் காணப்படும். இலைப்பேன் தாக்கம் அதிகமாகும் போது இலைகள் வெள்ளை நிறத்தில் மாறிவிடும். நாற்று வயலில் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த 20 சென்ட் நாற்றங்காலுக்கு தயாமீதாக்ஷம் 8.0 கிராம் வீதம் தெளிக்க வேண்டும். நடவு வயலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசாடிராக்டின் 400 மிலி (10000 பி.பி.எம்) அல்லது தயாமீதாக்ஷம் 40 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும் தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி/ஏக்கர் அல்லது கார்டாப்*

ஹைட்ரோகுளோரைடு **600** கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும். இளம் நாற்றங்காலில் இலை பேன் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்கத்தின் அறிகுறிகள் தென்படுமாயின் பாஸ்போமிடான் **40** எஸ்.எல் **50** மி.லி தெளிக்கலாம். நெல் பயிரில் இலையுறை கருகல் நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோயின் அறிகுறிகள் தென்படும் போது வேப்ப எண்ணெய் **3** % அளவில் தெளிக்கலாம்.

- அறுவடைக்கு தயாராக உள்ள நிலக்கடலையை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். முதிர்ச்சி அடைந்த நிலக்கடலை பயிர்களை அறுவடை செய்து கிடங்குகளில் சேமித்து வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- மழைக்காலத்தில் காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த ஏக்கருக்கு **2** ரைனோ லூர் இனக்கவர்ச்சி பொறிகளை அமைக்க வேண்டும்.
- நல்ல காற்றோட்ட வசதியை உறுதி செய்ய காய்ந்த மற்றும் வளைந்த இலைகளை அகற்ற வேண்டும். மேலும் **5** மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு ஊன்றுகோல் அமைக்க வேண்டும். இலேசான மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்கள் முறிய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் ஐந்து மற்றும் ஐந்து வயதிற்கு அதிகமாக இருக்கும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**கால்நடை ஆலோசனைகள்**

- கால்நடை கொட்டகைகளில் தரையை சுத்தமாகவும் தண்ணீர் தேக்கம் இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் வாரம் ஒருமுறை பிளிச்சிங்பௌடர் தூவிவிட வேண்டும் இது நோய்த் தொற்றை தடுக்க உதவும்.
- கால்நடை கொட்டகைகளில் மின்சாரம் கசிவதைத் தவிர்க்க தண்ணீர் தேங்குவதைத் தடுக்க வேண்டும்.
- குளம்பு அழுகல் நோயை தவிர்க்கவும், ஓட்டுண்ணி நோயை தவிர்க்கவும் மழை பெய்யும் போது கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்கக்கூடாது.
- ஆட்டுக்குட்டிகளை நுரைஈரல் அழற்சி நோயிலிருந்து பாதுகாக்க, கதகதப்பான கொட்டகை மற்றும் ஈரத்தன்மை இல்லாத இடமாகவும் இருக்க வேண்டும்.
- பன்றிக்குட்டிகளை குளிர் தாக்காமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தற்போது உள்ள உயர்ந்த மற்றும் குறைந்தபட்ச வெட்பநிலைகள் முயல்களின் உற்பத்திக்கு எதுவாக இருப்பதால் அவற்றை தனி கூண்டு முறையிலோ, கூட்டமாகவோ இனப்பெருக்கத்திற்கு அனுமதிக்க வேண்டும்.
- கோழிகளை தாக்கும் நாடாப்புழுக்களுக்கு இடைநிலை பருவங்களாக விளங்கும் உயிரிகள் தண்ணீர் மூலம் பரவும் என்பதால் கொட்டகையை சுற்றியுள்ள மழைநீரை அகற்ற வேண்டும்.

**7. அதிக மழை பெறும் மண்டலம்**

எதிர் வரும் ஐந்து நாட்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 27 - $30^0$ செ ஆகவும், குறைந்த பட்ச வெப்ப நிலை 21 - 24 $^0$செ ஆகவும், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர அதிகபட்ச வெப்பநிலை 70 – 90 % பதிவாக வாய்ப்புள்ளது. மதியம் நேர அதிகபட்ச வெப்பநிலை 60 - 80 % பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 14 – 26 கி.மீ வேகத்தில் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

**தோட்டக்கலை பயிர்கள்**

மழை இருப்பதால் இளம் இரப்பர், பழ மரங்கள் மற்றும் வாழை மரங்களில் நீர் தேங்காமல் நல்ல வடிகால் வசதி செய்ய வேண்டும்.

***ரப்பர்***

*நெகிழி மழை தடுப்பான்களை மரத்தின் பால் வடியும் பகுதிக்கு மேல் பொருத்தி மழை காலத்திலும் பால் வெட்டலாம்.*

***மரவள்ளி***

*நுண்ணுயிரியினால் வேர் அழுகல் நோய் வராமல் பாதுகாக்க நல்ல வடிகால் வசதி செய்ய வேண்டும்.*

***வாழை***

*காற்றின் வேகம் (மணிக்கு 14 முதல் 26 கி.மீ) அதிகமாக இருப்பதால் குலை தள்ளிய வாழை மரங்களுக்கு மூங்கில் அல்லது சவுக்கு குச்சிகள் கொண்டு முட்டு கொடுக்கவும்.*

**தென்னை**

*தென்னை மரங்களுக்கு உரிய வடிகால் வசதி செய்யவும். இல்லாவிடில் தொடர் மழையால் தென்னையின் வேரை பூஞ்சாள நோய் தாக்க வாய்ப்புள்ளது.*

***பேராசிரியர் மற்றும் தலைவர்***
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.வே.ப.க., கோவை**